DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

Calendar ...

Miscellaneous ...

Preliminary Register ... Case No: Cr.M.P. No. 2595/2024

Session ...

Prosecution / PW-1

Deposition of Witness for ... Defence / Court

---

Name : திரு.கிருஷ்ணன்

Father's Name (or)

Husband Name : த/பெ.சண்முகம்

Village : N.மங்கலம்

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 20.08.2024

---

**முதல் விசாரணை**

1. நான் N.மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். நானும் எதிரியும் டெய்லர் வேலை செய்து வருகிறோம், எதிரி முகமது ரியாஸ் என்பவர் எனக்கு நண்பர் ஆவார் அதனால் எங்கள்

இருவருக்குள்ளும் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது.

2. 08.09.2021ம் தேதி அவரது வீட்டு பிரச்சனைக்காகவும், சொந்த செலவுக்காகவும் ரூ.300000/- கேட்டார். நான் முதலில் 08.09.2021ம் தேதி Gapy மூலம் ரூ.10000/- எதிரி வங்கி கணக்கிற்கு செலுத்தினேன்

3. பின்னர் 08.11.2021ம் தேதி ரூ.2,90,000/- எதிரி வீட்டில் வைத்து கொடுத்தேன். பின்னர் பணத்தை ஒரு மாதம் கழித்து கேட்டேன். தருகிறேன் என்று நாட்கள் கடத்தி வந்தார். பின்னர் சுமார் ஒரு வருடம் கழித்து நான் நேரில் போய் வீட்டில் கேட்டதற்கு 27.10.2022ம் பின்தேதியிட்டு எதிரி கணக்கு வைத்திருக்கும் கனரா வங்கி, திருப்பூர் கிளை காசோலை எண்.082181, ரூ.3,00,000/- என்று பூர்த்தி செய்யப்பட்ட காசோலையில் கையெழுத்து செய்து, அவரது வீட்டில் வைத்து கொடுத்தார்.

4. 26.10.2022ம் தேதி எதிரியிடம் மறுநாள் காசோலையை வசூலுக்கு செலுத்துவதாக சொன்னேன் எதிரியும் காசோலையை வசூலுக்கு மேற்படி வங்கியில் செலுத்துமாறு கூறினார். அதன்பேரில் 27.10.2022ம் தேதி மேற்படி காசோலையை வசூலுக்கு எனது IOB வங்கி மங்களக்குடி கிளையில் தாக்கல் செய்ததில் கையெழுத்து மாறுபடுவதாக சொல்லி 04.11.2022ம் தேதி திருப்பப்பட்டது

5. இதுகுறித்து நான் எதிரியிடம் கேட்டதற்கு எதிரி மறுபடியும் எனக்கு காசோலையோ அல்லது தொகையோ தருவதாக சொன்னார் ஆனால் அவ்வாறு எதிரி நடந்து கொள்ளவில்லை

6. பின்னர் நான் 24.11.2022ம் தேதி எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி சட்ட அறிப்பை பெற்றுக்கொண்ட எதிரி யாதொரு பதிலும் அனுப்பவில்லை, தொகையும் செலுத்தவில்லை. என்னால் உரிய காலத்தில் மேற்படி காசோலை வழக்கை தாக்கல் செய்யாமல் போனதற்காக காலதாமத மண்ணிப்பு கோரி Cr.M.P.No.2577/2023 மனு தாக்கல் செய்து அந்த மனுவும் அனுமதிக்கப்பட்டது.

7. எனவே மேற்படி எதிரி என்னிடம் பெற்ற ரூ.3,00,000/- தொகையை மோசடி செய்தது தொடர்பாக மேற்படி தொகையை பெற்றுத்தரும்படி எதிரிக்கு உரிய தண்டனை வழங்கும்படிக்கும் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்கிறேன்.